<u>வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்</u>

ந.க.எண்.5959/ஈ4/2018 நாள் 12.03.2019

பொருள்: தேர்தல் – நாடாளுமன்ற தேர்தல் – 2019 – தேர்தல் நடத்தை விதிகள் சார்ந்த சுற்றறிக்கை அனுப்புதல் சார்பு.

பார்வை: அரசு கடித எண்.3651/கல்வி / பட்ஜெட் 2 / 2019 நாள் 06.03.2019

நாடாளுமன்ற தேர்தல் 2019 நடைபெறுவதற்கான தேதி கடந்த 10.03.2019 பிற்பகல் 5.00 மணியளவில் அறிவிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினமே தேர்தல் நடத்தை விதிகள் தானாக அமலுக்கு வரத்தொடங்கிவிட்டது. எனவே வேலூர் மாவட்டத்திலுள்ள கல்வித்துறைக்குட்பட்ட அனைத்து அலுவலகங்கள் மற்றும் பள்ளிகள் கீழ்க்கண்ட விதிமுறைகளைப் பின்பற்றி செயல்படுமாறு அறிவிக்கப்படுகிறது. மேலும் தேர்தல் நன்னடத்தை விதிகள் சார்ந்த அரசின் அறிவிப்பும் வேலூர் முதன்மைக் கல்வி அலுவலக இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

1. தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததைத் தொடர்ந்து பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களின் புகைப்படங்களை பத்திரமாக உடனே அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட வேண்டும்.
2. பள்ளி வளாகத்திற்குள்ளும் வகுப்பறைக்குள்ளும் சுற்றுச்சுவர்களிலும் உள்ள அரசியல் தலைவர்களின் படங்கள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் சார்ந்த விளம்பரங்கள், அரசியல் தலைவர்களின் பெயர்களுடன் கூடிய கல்வெட்டுகள், சின்னங்கள் இருப்பின் துணிகளைக் கொண்டோ அல்லது வேறு வகையிலோ மறைத்து வைக்கப்பட வேண்டும்.
3. திறப்பு விழா கல்வெட்டு மற்றும் இதர கல்வெட்டு மற்றும் விளம்பரங்களில் உள்ள அரசியல் தலைவர்களின் பெயர் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர் ஆகியவை முற்றிலுமாக துணிகளைக் கொண்டோ அல்லது வேறு வகையிலோ மறைத்து வைக்கப்பட வேண்டும்.
4. ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் சமூக வலைதளங்களில் அரசியல் சார்ந்த பதிவுகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
5. மாவட்ட கல்வி அலுவலகங்கள் சார்ந்த இணைய தளத்தின் முகப்பு மற்றும் வடிவமைப்பில் அரசியல் தலைவர்களின் படங்கள் இருப்பின் தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் உள்ள காலத்தில் நீக்கப்பட வேண்டும்.
6. வாக்களிக்க தகுதியான இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் மாவட்ட தேர்தல் அலுவலரின் வழிகாட்டுதலின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

Scanned by CamScanner

7. மாணவர்களுக்கான இறைவணக்கக் கூட்டத்தில் வாக்களித்தலின் முக்கியத்துவத்தினை மாணவர்களுக்கு தெளிவுப்படுத்துதல் வேண்டும்.
8. மாணவர்கள் மூலமாக அவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.
9. வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் மாதிரி வாக்குப்பதிவு ஆகியவை பள்ளி வளாகங்களில் நடத்த முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
10. பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் மேற்காண் பொருள் குறித்து விளக்கம் அளிக்க வேண்டும்.
11. வாக்குச்சாவடி மையங்களாக செயல்படக்கூடிய பள்ளிகள் சுற்றுப்புறம் தூய்மையாகவும் சுகாதாரமான முறையிலும் பராமரிக்கவும் குடிநீர், மின் இணைப்பு மற்றும் கழிப்பிட வசதி பயன்படுத்தும் வகையில் இருக்கவும் சார்ந்த உள்ளாட்சி மன்றம் மற்றும் நகராட்சி அலுவலர்களைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
12. வாக்குச்சாவடி மையங்களை எந்த நேரத்திலும் பல்வேறு துறை அலுவலர்கள் வந்து பார்வையிடுவார்கள் என்பதால் எந்த நேரத்திலும் அக்கட்டிடத்தின் சாவி பார்வையிட வருகைத்தரும் அலுவலர்களுக்கு வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
13. வட்டாரக் கல்வி அலுவலர்கள் மேற்காண் பொருள் குறித்து தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.
14. மாவட்டக் கல்வி அலுவலர்கள் தாங்கள் பார்வையிடும் பள்ளிகளில் (தொடக்கப் பள்ளிகள் உட்பட) மேற்காண் விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதா என கண்காணிக்க வேண்டும்.
15. தேர்தல் விதிமுறைகள் மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர்,வேலூர்.
முதல்வர், ஆசிரியர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை
அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்
அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள்
அனைத்து வகை பள்ளித்தலைமை ஆசிரியர்கள்

நகல்
மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

Scanned by CamScanner